1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[பிற்பகல் 12—40]

இ. நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவு தமிழ்நாடு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 56/1981) ஆய்வுக்கு *எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று கோருகிறேன்.

திரு. என் கிட்டப்பா: தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் ஒரு நல்ல தலைப்பின்கீழ் நாமெல்லாம் எதிர்பார்த்த காரியத்தை கொண்டுவருவார் என்று கருதிய நேரத்தில் அதாவது நிலஉச்சவரம்புபற்றி அவர்எடுத்துச் சொல்லு கின்ற தலைப்பின்கீழ், அவர் எடுத்துச் சொல்லுகின்ற காரியங் களைப் பார்க்கும்போது, மிகச் சாதாரணமானவை என்று என் னைப் போன்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தோன்றச் செய்கின்றது. குறிப்பாக, கரும்பு நிலம் அதிலும் மிகவும் குறிப்பாக ஆரூரான் சர்க்கரை ஆலை தொடர்புடைய கரும்பு

---

* 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.